மற்றும் மாவட்டக் காவல் துறை பணியாளர்களுக்கு, 115.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் 3000 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு, நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ராஜபாளையம் மொட்டமலையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 11–வது அணிக்கு கட்டப்படவிருக்கின்ற குடியிருப்புகளும் அடங்கும்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியில், எங்களது கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு 11 ஆம் அணி சிறப்புக் காவல் படையினருக்குப் புதியதாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு உத்தரவிட்ட எங்களது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

23–

பெண் காவலர்கள் நியமனம்

***9945–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

காவல் துறையில் க்யூ பிரிவில் பெண் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் பணியமர்த்தப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல் துறையில் க்யூ பிரிவில் பெண் காவலர்கள் பணிபுரிகின்றனர். இப்பிரிவில் பணியாற்றுபவர்கள் க்யூ பிரிவு சம்பந்தப்பட்ட தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பதில் வல்லவர்களாகவும், கடமை உணர்வுடன் செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். இத்தகைய தகுதியுடைய ஆர்வமுள்ள பெண் காவலர்கள், இப்பிரிவில் சேர விருப்பம் தெரிவித்தால், தேவைக்கேற்ப பெண் காவலர்களும் இந்துப் பிரிவில் நியமிக்கப்படுவார்கள்.

2002 அக்டோபர் 28]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக காவல் துறையினரை மனித நேயத்தோடு அழைத்து, பரிவோடு, கனிவோடு அவர்களுடைய குறைகளையும் களைந்து, இந்திய அரசியல் வரலாற்றிலே இதுவரை யாரும் செய்யாத சாதனையைச் செய்து, பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குலத்திற்குப் பெருமை சேர்க்கும், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், விருப்பம் தெரிவித்தால், தேவைக்கேற்ப பெண் காவலர்களும் இந்த க்யூ பிரிவிலே நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்கள். பெண்கள் இந்தச் சமுதாயத்திலே எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மிகப் பணிவான நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

முற்பகல் 10–15

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் க்யூ பிரிவில் பணியாற்றுகின்ற, பணியாற்றுவதற்கு வருகின்ற பெண் காவலர்களுக்கான கடமை உணர்வுகளைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். அவர்கள் இரகசியமாகவும், சிறப்பாகவும் செயல்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினார்கள். ஆகவே, க்யூ பிரிவிலே பணியாற்றுவதற்கு வரக்கூடியவர்களுக்கும், க்யூ பிரிவில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பெண் காவலர்களுக்கும், பெண் அதிகாரிகளுக்கும் சிறப்பு ஊதியமாக ஏதேனும் அவர்களுக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையின் 'Q' Branch–ல் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் உட்பட மொத்தம் 620 நபர்கள் பணிபுரிகின்றனர். இந்தப் பிரிவில் தற்போது ஒரேயொரு பெண் காவலர் மட்டும் பணிபுரிந்து வருகிறார்.

நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, 'Q' Branch–ல் பணிபுரிய விருப்பமும், தகுதியும் உள்ள பெண் காவலர்கள் தேவைக்கேற்ப நியமிக்கப்படுவார்கள். ஆனால் காவல் துறையில் எல்லோருக்கும் ஊதியம் ஒன்றுதான். இதற்காக சிறப்பு ஊதியம் ஏதும் வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மகளிர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வரதட்சணை தொடர்பான வழக்குகளில் மட்டுமே பெண் காவல் துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களைப் பொருளாதாரக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், அரசு ஊழியர்கள், மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கவனிப்பதிலும் அதிக அளவில் ஈடுபடுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி க்யூ பிரிவு பற்றியதாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இதுசம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

24–

புதிய கட்டடம்

***12888–திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 3 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 107, உள் துறை, நாள் 8–2–2002–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இனி கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படும்.